**60 பரியை நரியாக்கி வையைஅழைத்த படலம்**

அரிமர்த்தன பாண்டியன் அளித்த வெகுமதியுடன் தன் இல்லம் அடைந்த வாதவூரான் தனிமையில் சிந்தித்தான். தாம் வேண்டியபடி இறைவனின் பணிக்கு செலவிட வழிசெய்து, மன்னனுக்கும் நல்ல குதிரைகள் கொடுத்து ,தன்னையும் காப்பாற்றிய ஐயனை வழி படுதல் இன்றி தமக்கு வேறு வேலையில்லை என்ற எண்ணம் கொண்டு சோம சுந்தர்ரை மனத்தில்தியானித்தான்.

இரவு வந்ததும் அரிமர்த்தன பாண்டியன் அரண்மனை லாடத்தில் கட்டியிருந்த குதிரைகள், அவைகளுக்கு பழக்கமில்லாத உணவு வகை களை உண்ண மறுத்தன. ஐயனின் திருவிளையாடலினால் தங்களது உண்மை, நரி வடிவத்தைக் கொண்டன. நரிகளெல்லாம் கட்டப்பட்டிருந்த சங்கிலியை அறுத்துக் கொண்டு, அங்கு கட்டப் பட்டிருக்கும் குதிரைகளைக்கடித்து அதன் ரத்தத்தைக் குடித்தன. ஊரை நாசமாக்கின.

இதனைப் பார்த்த வீரர்கள் அஞ்சி நடுங்கினர். அரண்மனை வாயிலை திறந்தவுடன் எல்லாநதிகளும் விரைவாக ஓடிகாட்டிற்குள் மறைந்தன. மன்னனிடம்பரிகள்நரிகளாகிநகரைநாசம்செய்ததைவிளக்கினர். இதைக் கேட்ட மன்னன் சீறிசினந்து . மந்திரிகளை அழைத்த அரிமர்த்தனபாண்டியன், தனது மாயத்தால் காட்டிலுள்ள நரிகளை பரியாக்கி தன்னை மோசம் செய்த வாதவூரானை என்ன செய்யலா ம்என்றுஆலோசனைக்கேட்டான்.

ஈஸ்வரத்யானத்திலேயேஇருந்தவாதவூரான்நடந்ததுஎதுவும்அறியாமல் அரசன்முன்செல்ல, அரசன்நடந்ததைக்கூறி, காவலர்களிடம், அவன்தமக்குபணத்தைதரும்வரைக்கடும்காவலில்வைத்துகொடியத ண்டனைகளைஅளிக்குமாறுஉத்தரவிட்டான்.
காவலர்கள்வாதவூர்ரைநடுப்பகலில்ஆற்றில்சுடும்மணலில்நிறுத்திபல வகையில்துன்புறித்தினார்கள்.
மாணிக்க வாசகராகிய வாதவூரான் படும் துன்பத்தை காணப் பொருக்காத ஐயன் வைகையை ஊழிக்கால கடல் போல் பெருகிவரச் செய்தார்.

பெருகிவந்தவெள்ளத்தால்நகர்மிகவும்நாசமடைந்தது. மக்கள் செய்வது அறியாது திகைத்து நின்றனர். வாதவூரானை தண்டித்துக். கொண்டிருந்த காவலர்கள் அவனை விட்டு நீங்கி தத்தம் உடைமைகளைப் பாதுகாக்க விரைந்து ஓடினர். தனித்து விடப்பட்ட வாதவூரார் திருக்கோயிலுக்குச் சென்று சோம சுந்தரரை தஞ்சமடைந்தார்.

**பல்லவி**

பரிகள் நரியாகி நள்ளிரவில் நாட்டையெல்லாம்
நாசம் செய்ததையறிந்த மன்னன் வெகுண்டான்

**அனுபல்லவி**

எரிகின்ற வெய்யிலில் இருந்திட அமைச்சனும்
எம்பெருமானே என்று கதறியே வீழ்ந்தான்

**சரணம்**

வாதவூரனின் செய்கை பாண்டியன் அறிந்திட
வைகையை ஊழிக் காலக் கடல் போல் வரச்செய்தாய்
வேதனையுடன் பொருளை வெள்ளத்தினின்றும் காக்க
காவலர் விரைந்ததும் கோயில் வந்தான் வாதவூரன்